# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் புதுக்கோட்டை மாவட்டம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை திரு. எஸ். தனராசு, பி.இ.,

ந.க.எண். 80/2020/புமா                                                  நாள். 01.11.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051 ,சார்வரி வருடம், கார்த்திகை திங்கள் 16- ஆம் நாள்.

பொருள்: மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம். புதுக்கோட்டை மாவட்டம் - பொன்னமராவதி வட்டம ஊராட்சி ஒன்றியம் - வேகுப்பட்டி ஊராட்சி பொன்னமராவதி கிழக்கு கிராமம், சர்வே எண்.807/4,5 -ல் 0.64 ஏக்கர் (2600 ச.மீ) பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் - தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
1) மனுதாரர் திரு.R.M.தேனம்மை, K.N. முத்துபழனியப்பன் மற்றும் K.N. மணி அவர்களின் விண்ணப்பம் நாள். 05.06.2020.(சிவகங்கை மண்டல அலுவலகத்தில் பெறப்பட்டது)
2) அரசாணை எண்.18, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை, நாள்.04.02.2019.
3) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்சித்துறை, நாள்.04.05.2017.
4) நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண்.4367/2019-BA2 நாள்.06.11.2019.
5) மனுதாரர் நன்னிலை வரி கட்டணம், மற்றும் கூர்ாய்வு கட்டணம் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள்.27.11.2020.
6) தானப்பத்திர ஆவண எண்.2338/2020 நாள்.17.10.2020.
7) துணை இயக்குநர், சிவகங்கை மண்டலம் அவர்களின் கோப்புஎண்.1012/2020 சிம3 (சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது).

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம் ஊராட்சி ஒன்றியம், வேகுப்பட்டி ஊராட்சி, பொன்னமராவதி கிழக்கு கிராமம், சர்வே எண்.807/4,5 -ல் 0.64 ஏக்கர் (2600ச.மீ) பரபபளவு கொண்ட இடத்தில் மனையிடத்தில் மனைப்பிரிவு அனுமதி கோரி பார்வை 1-ல் சுட்டிய கடிதம் மூலம் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ(புமா)எண்.04/2020 என எண்ணிடப்பட்டு கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும்இத்துடன் இணைக்கப்பட்டு மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்-2 தொகுப்பு மேல்நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1 நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வாக தொழில்நுட்ப அனுமதி வழங்குவதன் மூலம் விண்ணப்பதாரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரபத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீதுள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

2 The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Authority.

3 பார்வை 3-ல் சுட்டிய அரசாணையின்படி நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்படும் மேம்பாடுகளுக்கும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017, விதி(3)-ன்படி உள்ளாட்சிக்கான கூராய்வுக் கட்டணமாக ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) விதி (9)-ன்படி நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 -ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)உட்கூறு பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அதனை வசூலித்து கீழ்க்கண்ட அரசுக் கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்ட பின்னரே மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**Land Use Conversion Charges:**

0217 Urban Development -60 Other Urban Development Schemes -800 Other Receipts AS Receipts under Land use conversion charges - 27 Non Taxation fees -09 collections.

DPC: 0217 60 800 AS 2790.

4 நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கையின்படி "உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்."

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

**இணைப்பு:**
மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
மனைப்பிரிவு நிபந்தனைகள் (இரண்டு தொகுப்பு)

**பெறுநர்:**

1. ஊராட்சி மன்ற தலைவர்,
   வேகுப்பட்டி ஊராட்சி,
   பொன்னமராவதி வட்டம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

**நகல் மனுதாரர் (உள்ளாட்சி மூலமாக)**

2. திரு.M.R. தேனம்மை
   K.N. முத்துபழனியப்பன்
   K.N. மணி.
   T.S No.1007. வடக்கு மூன்றாம் வீதி,
   புதுக்கோட்டை மாவட்டம்.

# தமிழ்நாடு அரசு
# நகர் ஊரமைப்பு துறை
# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
# புதுக்கோட்டை மாவட்டம்.

மனைப்பிரிவு : ம.வ/மா.ந.ஊ(புமா) எண். 04/2020 கோப்பு எண்: 80/2020/புமா

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1 மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ/மா.ந.ஊ(புமா) எண்.04/2020 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 175 மற்றும் 179 -ன் பிரிவின்படி 300(8)பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட உபவிதிகளின்படி மனுதாரரால், நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட்ட சாலை உள்ளாட்சியால் பராமரிக்கப்பட வேண்டும்.

2 அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்துத் தர வேண்டும்.

3 நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள். சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

4 இம்மனைப்பிரிவில் (TNCD&BR-ன்படி) வளர்ச்சி கட்டுபாட்டு விதகளின்படி அங்கீகரிக்கப்பட்ட தானமாக ஒப்படைக்கப்பட்டு தார்சாலையாக அமைக்கப்பட்டுள்ள சாலைகளை உரிய பதிவேட்டில் பதிவு செய்து பொதுச்சாலையாக உள்ளாட்சியால் பராமரிக்கப்பட வேண்டும்.

5 மேற்படி சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையை உள்ளாட்சிக்கு செலுத்தல் வேண்டும்.

6 இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

7 மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

8 அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்கான தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை பண்டகச்சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

9 விரிவு அபிவிருத்தித் திட்ட பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒருபக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் அனுமதிக்கப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையும் பயன்படுத்தக் கூடாது.

10 அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் (23 அடி) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5மீட்டரும் (5 அடியும்) மற்றும் 9 மீட்டர்(30 அடி) மற்றும் 12 மீட்டருக்கு (40 அடி) மேல் மற்றும் 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்கு மேலும் 24 மீட்டருக்கு (80 அடி)அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின்படி 2.4மீ (8அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எவ்வித கட்டடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

11 மனைபபிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

12 கடைக்கால் (Foundation) போடத்தேவையான அளவிற்கு அதிகமாவோ தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர்செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

13 9மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லலையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

14 மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய ஊராட்சி மன்ற தலைவர், வேகுப்பட்டி ஊராட்சி அவர்களிடம் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும்.

15 மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவி செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

16 பொது உபயோகம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

17 மனையின் ஊடே குறைந்த அழுத்த உயர் அழுத்த மின்கம்பி பாதை தந்திக்கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறே மாற்றி அமைக்க வேண்டும்.

18 மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைகளுக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி (Executive Authority) யுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். மனைபபிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விறகப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனை பத்திரங்களில் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

19(அ) அரசாணை எண்.18. ந.நி.(ம) கு.வ.துறை. நாள் 04.02.2019-ன்படி உரிமை குறித்து உள்ளாட்சி நிர்வாகமே பொறுப்பானதாகும் மற்றும் நிர்வாக அதிகாரியால் (Executive Authority )நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றின் பேரில் இத்தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(இ) மனைப்பிரிவு இடம் 1894- ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசிலனை செய்த பின்னரும் நில உச்சவரம்புச் சட்டம் 1978 மற்றும் நிலச்சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக நிர்வாக அதிகாரி (Executive Authority) மனநிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவுக்கு **ஊராட்சி மன்ற தலைவர் வேகுப்பட்டி ஊராட்சி** ஒப்புதலளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(ஈ) மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

(உ) மேலும் மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதையும் மனநிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவிற்கு **ஊராட்சிமன்ற தலைவர், வேகுப்பட்டி ஊராட்சி** அவர்களால் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20 மனுதாரர் **ஊராட்சிமன்ற தலைவர், வேகுப்பட்டி ஊராட்சி** அவர்களால் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

21 நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

22 புதிய வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதி அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-I) நாள்.04.02.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் அனைத்தும் பொருந்தும்.

23 விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

24 ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

25 மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி, உள்ளாட்சி அலுவலர் வழங்கிய சான்றினை ஏற்று உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நிலஉரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும், கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

| அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம் | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | 2600 ச.மீ |
| கோரப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | 10 |
| ஒதுக்கப்பட்ட மொத்த மனைகளின் எண்ணிக்கை | 10 |
| மனையிடங்களின் மொத்த பரப்பளவு | 2020.50ச.மீ |
| சாலையின் பரப்பளவு | 579.50 ச.மீ |
| உள்ளாட்சி உபயோக மனை | 54.90 ச.மீ (2.72%) |
| மின்வாரிய உபயோக மனை | 45.90 ச.மீ (2.72%) |
| பூங்கா | ஒதுக்கீடு ஏதுமில்லை. |

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

148

வேகுப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.எம்.அர்ச்சுணன்.

ஊ.க.எண் 1/2020 நாள்:04-12-2020

பொருள்:

மனைப்பிரிவு பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம் பொன்னமராவதி கிழக்கு வேகுப்பட்டி ஊராட்சி கிராமம் புல எண்:807/4,5-ல் அமையும் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

பார்வை:

1.MR.தேனம்மை ,KN.முத்துபழனியப்பன் ,KN.மணி விண்ணப்பம்

2.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அங்கீகார எண்: ம.வ/மா.ந.ஊ(புமா)

எண்:04/2020

3.தொடர்புடைய ஆவணங்கள்

புதுக்கோட்டை மாவட்டம் வேகுப்பட்டி MR.தேனம்மை, KN.முத்துபழனியப்பன் ,KN.மணி என்பவர்களுக்கு பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம் வேகுப்பட்டி ஊராட்சி கிராமம் புல எண்:807/4,5-ல் 10 மனைப்பிரிவுகள் பார்வை-2ல் கண்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரால் ம.வ/மா.ந.ஊ(புமா)எண்:04/2020 என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் மனைப்பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் அமைத்து எல்லைக்கற்கள் நட்டு மேம்பாடுகள் செய்துள்ளனர் சாலைகள் மற்றும் LP & EB க்கு இடங்களை ஊராட்சி மன்ற தலைவருக்கு தானமாக ஆவண எண்:2338/2020 நாள்:17-10-2020 அன்று பொன்னமராவதி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து அசல் தான பத்திரத்தைச் சமர்பித்துள்ளனர். மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.90480-/- (தொன்னூறாயிரத்தி நானூற்றி எண்பது மட்டும்)பொன்னமராவதி சார்நிலை கருவூலத்தில் கணக்கில் SBI பொன்னமராவதியில் 04-12-2020 அன்று 6-ம் செலுத்து சீட்டில் கட்டியுள்ளனர்.வேகுப்பட்டி ஊராட்சி மன்ற தீர்மான எண்:87/2020-2021 நாள்:29-10-2020-ன் படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனவே வேகுப்பட்டி கிராம புல எண்:807/4,5-ல் அமைக்கப்பட்டுள்ள 10 மனைகள் அடங்கிய மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவுகளின் 10யும் MR.தேனம்மை, KN.முத்துபழனியப்பன் ,KN.மணி என்பவர்கள் விற்பனை செய்வதற்கு வேகுப்பட்டி ஊராட்சி மன்றத்திற்கு ஆட்சேபனை ஏதுமில்லை என சான்றும் அளிக்கப்படுகிறது.

பெறுநர்:

MR.தேனம்மை ,KN.முத்துபழனியப்பன் ,KN.மணி

ஊராட்சி அலுவலர்
வேகுப்பட்டி



# our services doesn't just end there

## Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

## Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

## Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

## NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

## Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate